

# SRES  NFIR



## மத்திய சங்கம் – பெரம்பூர்

## கிருஸ்துமஸ் & 2020 புத்தாண்டு, பொங்கல், குடியரசு தின நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் கிருஸ்துமஸ் மற்றும் **2020ம் ஆண்டின் இனிய புத்தாண்டு, பொங்கல், குடியரசு தின நல்வாழ்த்துக்களை** SRES - NFIR **தெரிவிக்கிறது.** 07–02–1919 ஆம் ஆண்டு பெரம்பூரில் SRES துவங்கப்பட்டு **3–9–1927**ம் ஆண்டு அண்ணல் மகாத்மா காந்தி மற்றும் கஸ்தூரிபாய் அம்மையார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொழிலாளர்களின் பேராதரவோடு அடியெடுத்து வைத்து நூற்றாண்டின் நிறைவு விழாவை வருகின்ற 07.02.2020 அன்று தொழிலாளர்களின் பேராதரவோடு கொண்டாட உள்ளது. ஆங்கிலேயரின் அடிமை சாசனத்திலிருந்து நாடு விடுதலை பெற SRES சுதந்திர போராட்டத்தில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பல்வேறு அறப்போராட்டங்களை இரயில்வேயில் நடத்தி ஆங்கிலேயரை திணற வைத்தது அன்று!

பெரம்பூரில் உள்ள SRESன் மத்திய சங்க ஒற்றுமை நிலையத்திற்கு தேசிய தலைவர்களான திரு. **வல்லபாய் படேல்,** சட்ட மாமேதை **Dr. B.R. அம்பேத்கார், திரு. ஜவஹர்லால் நேரு, திரு. ஜெயபிரகாஷ் நாராயணன், திரு.K.காமராஜர், திருமதி. இந்திராகாந்தி, திரு.ராஜாஜி** போன்ற பலர் வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள். **1929** முதல் **1934** வரை SRESற்கு தலைவராக இருந்த **திரு.V.V.கிரி** அவர்கள் இந்திய நாட்டின் குடியரசு தலைவராக பொறுப்பேற்று பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிற்சங்கம் ஆரம்பித்த பிறகு வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்தும், சம்பள உயர்வு, வேலை நேரம், அலவன்ஸ்கள் என மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட பல வேலை நிறுத்த போராட்டங்களால் சிலர் வேலை இழந்தனர். துப்பாக்கி சூட்டில் சிலர் உயிரிழந்தனர். **25.10.1930** அன்று **திரு.வி.வி.கிரி** தலைமையில் சம்பள உயர்வு, அலவன்ஸ்கள் வேண்டுமென்று மாபெரும் வேலை நிறுத்த போராட்டம். நைட் டியூட்டி அலவன்ஸ், OT அலவன்ஸ், ஒர்க்ஷாப் தொழிலாளர்களுக்கு இன்சென்டீவ், NFIR - PNM மூலமாக **1976**ல் பதவி உயர்வுக்கான குழு அமைக்கப்பட்டு (RWCT - 1976) இன்று டெக்னீசியன் Gr.III, Gr.II, Gr.I, Sr.Tech. ஆக பதவி உயர்வு பெற்றுக் கொண்டிருப்பதற்கு SRES-NFIR தான் காரணம் என்பதை தொழிலாளர்கள் மறக்ககூடாது. போனஸ், வேலை நேரம் மற்றும் ரன்னிங் ஸ்டாப் அலவன்ஸ் போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி **2–10–1977**ல் வேலைநிறுத்த போராட்டம் நடைபெற்றது. இதில் சங்க தலைவர் **திரு.T.V.ஆனந்தன், ஜி.இராஜராம்,** GS மற்றும் **50** தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். மாலை **6** மணி வரை வண்டிகள் நிறுத்தப்பட்டன. சதர்ன் இரயில்வே முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. குப்பம் இரயில்வே ஸ்டேஷனில் **12** மணி நேரம் **1.12.1977** அன்று இரயில்கள் நிறுத்தப்பட்டன. **1979**ல் முதல் போனஸை பெற்றோம். அலவன்ஸ்கள் மாற்றி அமைக்கப்பட்டன.இரயில்வே தொழிலாளர்களுக்காக பல்வேறு நன்மைகளை செய்து தன் வாழ்நாள் முழுவதும் தன்னலமின்றி உழைத்திட்ட தொழிற்சங்க மாமேதை மறைந்த **திரு. T.V.ஆனந்தன்,**Ex.M.P. அவர்களை நெஞ்சில் நினைத்து பார்க்கிறோம். அன்று இரயில்வே தொழிலாளர்களுக்காக பென்ஷன் திட்டத்தை அவர் கொண்டு வந்த போது கேவலமாக பேசியவர்கள் எல்லாம் பிறகு ஓய்வு பெற்றவுடன் வியந்து பாராட்டியதும், தவறாக பேசியதற்கு வருந்தியதும் உண்டு. மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்து SRES - NFIR அன்று முதல் இன்று வரை பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும், பாராளுமன்றம் மற்றும் அனைத்து GM/DRM/CWM அலுவலகங்கள், பணிமனைகள், டிப்போக்கள் முன்பாகவும் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை SRES தலைவரும், NFIR ன் பொது செயலாளருமான **Dr.M. இராகவையாஜி** அவர்களின் கட்டளைக்கிணங்க நடத்தியதின் பயனாகத் தான் பல உத்திரவுகளை பெற்று அமுல்படுத்திய சங்கம் தான் SRES - NFIR என்பதை அனைவரும் அறிவீர்கள்.

### SRES - NFIR செய்த முக்கிய சாதனைகளில் சில..

1. **1954**ல் பென்ஷன் / குடும்ப பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்தி தொழிலாளர்களை வாழ வைத்திருப்பது.
2. தாஸ் கமிட்டி மூலம் கடந்த **42** ஆண்டுகளாக **6** மாதத்திற்கு ஒரு முறை DA உயர்வு பெற்றுத் தந்தது.
3. **1979**ல் போனஸ் சட்டத்தை அமுல்படுத்தி அனைவருக்கும் PLB போனஸ் பெற்றுத்தந்தது மட்டுமல்லாமல் **2006 –07**க்கு ரூ.**2301/–**, **2014–15**க்கு ரூ.**8976/–** அரியர்ஸாகவும் பெற்று தந்தது.
4. **10** ஆண்டுகளுக்கு ஒருமுறை CRC மூலம் அப்கிரேடேஷன் பெற்று தந்தது.
5. HRA, இன்சென்டிவ், OT அலவன்ஸ்களையும் மற்றும் அட்வான்ஸ்களையும் பெற்று தந்தது.
6. ACP க்கு பிறகு MACPS மூலம் **3** அப்கிரேடேஷன்களை பெற்று தந்தது.
7. CCL, En Cashment Leave, மாற்று திறனாளிகளுக்கு **4** நாட்கள் SCL பெற்று தந்தது.
8. LARSGESS திட்டத்தின் மூலம் வாரிசுகளுக்கு வேலை பெற்று தந்தது.
9. இரயில்வே தொழிலாளர்கள் அனைவருக்கும் AC கோச்சில் செல்ல பாஸ் பெற்று தந்தது.
10. இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கம்பாஸினேட் அப்பாயின்ட்மெண்ட் பெற்று தந்தது.

**அன்று வெள்ளையனே வெளியேறு என போராட்டம் நடத்திய நாம், இன்று கொள்ளையனே வெளியேறு என போராட்டம் நடத்தி இரயில்வேயை காப்பதற்கு ஒன்றுபட்டு போராடுவோம்.**

உலகத்திலே தலைசிறந்த இரயில்வேக்களில் 2ஆம் இடத்தில் உள்ள இந்திய இரயில்வே தற்போது 17 ஜோனல்களாகவும், 7 உற்பத்தி பிரிவுகளாகவும், ஒர்க்ஷாப், ஓபன் லைன், பராமரிப்பு, இரயில்வே மருத்துவமனைகள், இரயில்வே பள்ளிகள், இரயில்வே பாதுகாப்பு படை (RPF) என பல பிரிவுகளாக கடந்த 160 ஆண்டுகளுக்கு மேலாக விரிந்து பரந்து ஒட்டு மொத்த இந்திய மக்களுக்கு சிறப்பான, பாதுகாப்பான போக்குவரத்து சேவையை செய்து வரும் இரயில்வே துறையை தனியாருக்கு தாரைவார்த்து சீரழிப்பதை SRES - NFIR வன்மையாக கண்டிக்கிறது.

2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மத்திய மோடி அரசு இரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டில் இணைத்து இரயில்வே துறையை அழிப்பதற்கான ஆரம்பகட்ட பணியை துவக்கியது. அன்று முதல் SRES - NFIR தொடர்ந்து இதனை எதிர்த்து வருவதை அனைவரும் அறிவீர்கள்.

மத்தியில் பா.ஜ.க மோடி அரசு ஆட்சி பொறுப்பை ஏற்றதிலிருந்து தொழிலாள விரோத போக்கை கடைபிடித்து வருவது வேதனை அளிக்கிறது. குறிப்பாக இரயில்வே துறையின் பட்ஜெட்டை 5 ஆண்டுகளுக்கு முன்பாக பொது பட்ஜெட்டில் இணைத்தார்கள். இரயில்வேயில் இருக்கின்ற காலியிடங்களை பூர்த்தி செய்யாமல் சரண்டர் செய்து வருவதும், தொழிலாளர்கள் செய்கின்ற வேலைகளை அவுட்சோர்சிங் செய்வதும், இரயில் நிலைய பராமரிப்பு பணிகளை தனியாருக்கு தாரைவார்ப்பதும், இரயில்வே நிலங்களை தனியாருக்கு குத்தகைக்கு விடுவதும், இரயில்வே மருத்துவமனைகள், இரயில்வே பள்ளிகள், RPF உள்ளிட்ட அனைத்தையும் தனியாருக்கு தாரைவார்க்கின்ற தான்தோன்றிதனமான முடிவினை மத்திய அரசு எடுப்பதற்கு துணிந்த போது தொடர்ந்து தேசிய அளவிலும், அனைத்து ஜோனல் இரயில்வேயிலும் தொடர்ந்து போராட்டங்களை SRES - NFIR நடத்தி வருவதை அனைவரும் அறிவீர். தற்போது லாபமாக செயல்பட்டு வரும் ஒட்டு மொத்த இரயில்வேயை தனியாருக்கு தாரை வார்க்கும் மோடி அரசின் நாசகார திட்டத்தை வாபஸ் பெற SRES - NFIR தொடர்ந்து போராடி வருகிறது. குறிப்பாக இரயில் போக்குவரத்து, இரயில் நிலையங்கள் பராமரிப்பு, ரேபரேலியில் உள்ள MCF கார்ப்பரேட்டுக்கும், ICF, RCF, CLW, DLW, DMW, WAP, போன்ற 6 உற்பத்தி பிரிவுகளை IRRSC கம்பெனியாகவும், இராயபுரம் உள்ளிட்ட 5 பிரிண்டிங் பிரஸ்கள் 31.3.2020க்குள் மூடுவதற்கும், மருத்துவமனைகள், பள்ளிகள், ஒர்க்ஷாப், ஓபன்லைன் உள்ளிட்ட பிரிவுகளை தனியாருக்கும், 18.6.2019 அன்று இரயில்வே போர்டு பிறப்பித்த உத்தரவை உடனே வாபஸ் பெற வலியுறுத்தியும், SRES-NFIR நடத்தும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறது. லக்னோவிலிருந்து புதுடெல்லி தேஜாஸ் இரயில் சேவையை 4.10.19 அன்று தனியாரிடம் தாரை வார்த்தபோது அனைத்து இரயில் நிலையங்களிலும் போராட்டம் நடத்தியது NFIR பெடரேஷனைச்சார்ந்த தொழிற்சங்கம் மட்டுமே என்பதை அறிவீர்.

## 26.12.2019 புதுடெல்லியில் நடைபெற்ற DC/JCM கூட்டத்திலிருந்து NFIR வெளிநடப்பு!

### மத்திய அரசு இரயில்வேயில் புகுத்துகின்ற 100 நாள் நாசகார திட்டத்தின் அடிப்படையில்

● இரயில்வேயை தனியார்மயமாக்குவதை ● TEJAS Express உள்ளிட்ட 150 இரயில் வண்டிகளை தனியார்க்கு தாரைவார்ப்பதை ●இரயில் நிலையங்களை பராமரிப்பதை தனியாருக்கு கொடுப்பதை ●ICF, MCF, உள்ளிட்ட புரடெக்ஷன் பிரிவுகளை கார்ப்ரேட்டுகளுக்கும், ஒர்க்ஷாப் உள்ளிட்டவைகளை தனியாருக்கு கொடுப்பதை ●இராயபுரம் உள்ளிட்ட பிரிண்டிங் பிரஸ்களை மூடுவதை ●புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்ய மறுப்பதை ●7வது ஊதியக்குழுவில் உள்ள குறைபாடுகளை நீக்கி சம்பள உயர்வு வழங்க மறுப்பதை ●55 வயது (அ) 30 வருட சர்வீஸ் செய்தவர்களுக்கு கட்டாய ஒய்வு ●60 வயது (அ) 33 வருட சர்வீஸ் முடித்த தொழிலாளர்களுக்கு ஒய்வு ●குத்தகை பெயரில் இரயில்வே இடங்களை தனியாருக்கு தாரைவார்ப்பதை ●பயிற்சி முடித்த ஆக்ட் அப்ரண்டீஸ்களுக்கு வேலை வழங்க மறுப்பதை ●இரயில்வே போர்டை ரீஸ்டெக்சரிங் செய்து INDIAN RAILWAY MANAGEMENT SYSTEM என மாற்றுவதை பெடரேஷன்களோடு கலந்தாலோசிக்காமல் தான்தோன்றிதனமாக செயல்படுத்தும் மத்திய அரசை கண்டித்து 26.12.19 இன்று இரயில்வே போர்டில் நடைபெற்ற முக்கிய கூட்டத்திலிருந்து **Dr.M. இராகவைய்யா,** President /SRES & GS/NFIR அவர்கள் தலைமையில், **P.S.சூரியபிரகாசம்** GS/SRES & JGS/NFIR உள்ளிட்ட NFIR பிரதிநிதிகளும், AIRF பிரதிநிதிகளும் **வெளிநடப்பு** செய்தனர்.

பொதுவான கோரிக்கைகளை நிறைவேற்ற மறுக்கின்ற **மத்திய அரசை கண்டித்து INTUC** மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து **08.01.2020** அன்று நடத்துகின்ற **நாடு தழுவிய வேலை நிறுத்தம்** வெற்றி அடைய ஆதரவு தெரிவித்தும், மேற்குறிப்பிட்டுள்ள முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றிட இந்திய இரயில்வே முழுவதும் **ஜனவரி 8 முதல் 10 வரை** SRES - NFIR ஆர்பாட்டங்களையும், எழுச்சி கூட்டங்களையும், தர்ணா போராட்டங்களையும் நடத்தவுள்ளது. தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை காத்திட, இழந்த உரிமைகளை வென்றிட அனைவரும் இணைந்து செயல்படுங்கள். மத்திய அரசின் 100 நாள் நாசகார திட்டத்தை தகர்த்தெறிய

**உண்மைகளை சொல்லி நன்மைகளை செய்து வரும் பெடரேஷன் உள்ள தொழிற்சங்கமான SRES-NFIR தலைமையின் கீழ் அனைவரும் அணிதிரண்டு வாரீர்! வாரீர்!!**

**இரயில்வேயை காப்போம்! தேசத்தையும், தொழிலாளர்களையும் பாதுகாப்போம்!!**

| | | |
|---|---|---|
| **Dr.M.இராகவைய்யாஜி**<br>**GS/NFIR & President/SRES** | அறிக்கை எண் **1072**<br>**28.12.19** | **P.S.சூரியபிரகாசம்**<br>**GS / SRES & JGS/NFIR** |

**For More Details : sresindia.org & Click SRES Circulars.**